முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන
Department of Education-Southern Province Department of Education-Southern Province Department

தென் மாகாண கல்வித் திணைக்களம்

# Department of Education- Southern Province

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

## Second Term Test - 2022

தரம் 7
**Grade 7**

# வரலாறு

02 மணி
**Two hour**

பெயர் / சுட்டிலக்கம் :- ..............................................................................................................

## பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

- **01 – 05 வரையான வினாக்களில் பொருத்தமான விடைகளின் கீழ் கோடிடுக.**

01) புராதன கல்வெட்டுக்களில் சேனையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல்
1. செஹென்  2. சேன்  3. பிடபிம்  4. நவதெலிஹேன

02) குளங்களை அமைத்து விவசாய வளர்ச்சிக்கு பாரிய சேவை செய்த காரணத்தினால் 'மின்னேரிய தெய்வம்' என அழைக்கப்பட்ட மன்னன்
1. மகாசேனன்  2. மகா பராக்கிரமபாகு
3. தாதுசேனன்  4. வசபன்

03) அநுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட பத்துக் கிராம நிர்வாகம் மற்றும் குற்ற வழக்குகளை தீர்க்கும் சட்டதிட்டங்கள் அடங்கிய கல்வெட்டு யாது?
1. தோணிகல கல்வெட்டு  2. வேவல் கெட்டிய கல்வெட்டு
3. பதுளை தூண் கல்வெட்டு  4. மிஹிந்தலை சுவர் கல்வெட்டு

04) எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் சோழ ஆக்கிரமிப்பு இருந்து நாட்டை பாதுகாக்கும் நோக்கில் முதலாம் விஜயபாகு மன்னன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இந்திய அரசுகள் எவை?
1. பாண்டிய, பல்லவ  2. பாண்டிய, மேற்கு சாலுக்கிய
3. கலிங்க, பல்லவ  4. கலிங்க, பாண்டிய

05) தந்ததாதுவை பாதுகாக்க நிஸ்ஸங்கமல்ல மன்னனினால் அமைக்கப்பட்ட கட்டிடம்
1. ஹட்டதாகய  2. அட்டதாகய
3. வட்டதாகய  4. நிஸ்ஸங்கலதா மண்டபம்

- **06 – 10 வரையான வினாக்களில் கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியெனில் ( √) ஊனவும் பிழை எனில் பிழை (x) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.**

06) மூன்று போகங்கள் நெல் விளைவிக்கப்பட்டதாக தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது ( )

07) "ஹஸ்பு" "கஹபன" என்பன இலங்கையில் பயன்படுத்தப்பட்ட முதலாவது நாணயங்களாகும் ( )

08) இரண்டாம் சேன மன்னன் பல்லவ தேசத்தை ஆக்கிரமிப்பதற்காக குட்டக சேனாதிபதியின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தான் ( )

09) வெற்றிலை வழங்கி முதியவர்களை வணங்கும் முறை இந்நாட்டில் காணப்பட்ட தொட்டுணரக் கூடிய மரபுரிமை ஒன்றாகும். ( )

10) இலங்கையில் காணப்படும் புராதன சித்திரங்கள் அடங்கிய விசாலமான குகை விஹாரை தம்புள்ள ரஜ மகா விகாரையாகும். ( )

- **11 – 15 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

11) ........................................... சேனாதிபதியின் தலைமையில் மகா பராக்கிரமபாகு மன்னனின் பர்மா ஆக்கிரமிப்பு இடம் பெற்றது. (லங்காபுர / நகரகிரிகித்தி / ஜகத்விஜய)

12) மகா விஜயபாகு மன்னனின் உயர்ந்த நற்குணங்களைப் பற்றி .......................................... கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அம்பகமுவ / தெவனகல / சங்கமு விஹாரய)

13) கி.பி. 7ம் நூற்றாண்டாகும்போது தென்னிந்தியாவின் பெரும் பகுதியில் பரந்து காணப்பட்ட பல்லவ இராசதானியின் தலைநகரமாக ........................................ காணப்பட்டது. (மதுராபுரி/ காஞ்சிபுரம் / தஞ்சாவூர்)

14) புராதன காலத்தில் தமது பெண் மக்களை சமையல் கலையில் சிறந்தவர்களாக்குவது பெற்றோரின் கடமையாகும் என ........................................ நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சந்தர்மலங்காரய/ சீஹலவத்தூபகரணய/ சஹஸ்ஸவத்தூபகரணய)

15) ருவன்வெலிசாய தூபியை அலங்கரிப்பதற்காக .............................. மன்னன் உரோமாபுரியில் இருந்து பவள மணிகளை தருவித்தாக புராதன ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (9ம் அக்போ/ பாதிகாபய/ 2ம் சேனன்)

- **16 – 20 வரையிலான வினாக்களில் சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16) அநுராதபுர காலத்தில் ரட்ட எனும் பகுதி பரிபாலனத்துக்குப் பொறப்பாக இருந்தவர் ........................................ என அழைக்கப்பட்டார்.

17) முதலாம் விஜயபாகு மன்னனின் இளமைக் காலத்தில் பாதுகாப்பு வழங்கிய ........................ என்பவருக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்கள் பற்றி பனாக்கடுவ செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

18) காலிக் கோட்டையைபாதுகாப்பான கோடடையாக கட்டியெழுப்பியவர்கள் .................................................... ஆவர்.

19) பேராசிரியர் செனரத் பரணவித்தான அவர்களினால் சீகிரிய பூங்கா ............................................ எனப் பெயரிடப்பட்டது.

20) மகா பராக்கிரமபாகு மன்னனின் துணைவியான ....................................................... அரசி ஆடல் பாடல்களில் தலை சிறந்தவர் என மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(பு. 2x20 - 40)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை ஐந்தாகும்.**

01) (அ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் உள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை தெரிவு செய்து எழுதுக. (பு. 08)

i) அநுராதபுரம்
ii) மாகாவவி கங்கை
iii) மாந்தோட்டம்
iv) காலி
v) பொலன்னறுவை
vi) கண்டி
vii) கொடவாய
viii) மஹியங்கனை



(ஆ) i) A உருவில் காட்டப்படுவது யாது?
ii) இது அமைந்துள்ள நகரம் எது?
iii) இதனை அமைத்தவர் யார்?
iv) அவரின் இராஜ வம்சம் யாது?

(பு. 04)



உரு. A

(இ) i) B உருவில் உளளது யாது?
ii) அதனைத் தயாரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ள மூலப்பொருள் யாது?
iii) இது எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?
iv) இதில் காணக்கூடிய இலட்சினை யாது?

(பு. 04)



உரு. B

02) புராதன காலத்தில் காணப்பட்ட வாழ்வாதார முறைகளில் வியாபாரமும் அடங்கும்

i) புராதன காலத்தில் இலங்கையின் உள்நாட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட வெளிநாட்டு வர்த்தக வகுப்பினர் இரண்டைக் கூறுக. (பு. 02)

ii) A. புராதன காலத்தில் இருந்து இலங்கையுடன் வர்த்தக தொடர்புகளை வைத்திருந்த வெளிநாடுகள் இரண்டைக் கூறுக. (பு. 02)

B. வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய இந்நாட்டு துறைமுகங்கள் இரண்டைக் கூறுக. (பு. 02)

iii) A. வர்த்தக சட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நான்காம் உதய மன்னனினால் அமைக்கப்பட்ட கல்வெட்டு எது? (பு. 01)

B. அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சட்டங்களைக் கூறுக. (பு. 04)

03) i) அநுராதபுர இராசதானியை நீண்ட காலம் ஆட்சி செய்த இரண்டு இராஜ வம்சங்களை கூறுக. (பு. 02)

ii) அநுராதபுர இராசதானியின் இறுதிப் பகுதியில் இலங்கை மீது அதிக செல்வாக்குச் செலுத்திய இந்திய அரசுகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றின் தலை நகரங்களையும் குறிப்பிடுக. (பு. 04)

iii) A. அரச உரிமை கிடைத்த இரண்டு முறைகளைக் குறிப்பிடுக. (பு. 02)

B. அரசனின் பிரதான பொறுப்புக்கள் மூன்றையும் குறிப்பிடுக. (பு. 03)

04) i) மானவர்மன் இலங்கையின் ஆட்சியை கைப்பற்ற உதவிய பல்லவ அரசர்கள் யாவர்? (பு. 02)

ii) A. முதலாம் சேன மன்னன் காலத்தில் இந்நாடடை ஆக்கிரமித்த இந்திய ஆக்கிரமிப்பாளனையும் அவனுடைய நாடடையும் கூறுக. (பு. 02)

B. 5ம் மகிந்தன் காலத்தில் நாட்டை ஆக்கிரமித்த ஆட்சியாளனையும் அவனுடைய நாடடையும் கூறுக. (பு. 02)

iii) A. 2ம் சேன மன்னனின் தந்தை யார்? (பு. 01)

B. 2ம் சேன மன்னனின் சேவைகள் இரண்டை குறிப்பிடுக. (பு. 04)

05) i) 1ம் விஜயபாகு மன்னனின் தகவல்கள் அடங்கிய இரண்டு மூலாதாரங்களை குறிப்பிடுக. (பு. 02)

ii) 1ம் பராக்கிரமபாகு மன்னனினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைககள் இரண்டைக் குறிப்பிடுக. (பு. 03)

iii) A. நிஸ்ஸங்கமல்ல மன்னனினால் அமைக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுக்களைக் குறிப்பிடுக. (பு. 02)

B. நிஸ்ஸங்கமல்ல மன்னன் எதிர்கொண்ட சவால்கள் மூன்றைக் குறிப்பிடுக. (பு. 03)

06) i) கலாசார உரிமைகளை வகைப்படுத்திக் காட்டும் பிரதான இரு பிரிவுகளும் யாவை? (பு. 02)

ii) யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையில் காணப்படும் கலாசார உரிமைகள் நான்கை எழுதுக. (பு. 04)

iii) சீகிரியா ஒரு கோட்டை போன்று கலையகமாகவம் முக்கியத்துவம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தை எழுதுக. (பு. 05)

07) i) யுனெஸ்கோ நிறுவனத்தினால் உலக மரபுரிமையாக பின்வரும் நாடுகளில் பிரகடனப்படுத்திய இடங்களை எழுதுக.

A. பாகிஸ்தான் B. சீனா (பு. 02)

ii) இலங்கையில் வாழும் மக்கள் இனத்தவர் நான்கைக் குறிப்பிட்டு அவர்களினால் கொண்டாடப்படும் விழாக்கள் ஒவ்வொன்று வீதம் எழுதுக. (பு. 04)

iii) A. புராதன காலம் முதல் இந்நாட்டில் காணப்படும் சம்பிரதாய கலை நுட்பங்கள் இரண்டைக் கூறுக. (பு. 02)

B. பழைய கலாசார உரிமைகளை பாதுகாப்பதனால் எமக்குக் கிடைக்கும் பயன்கள் மூன்றைக் கூறுக. (பு. 03)